**45 பன்றிக்குட்டிகளுக்கு முலைப்பால் கொடுத்த படலம்**

மதுரை நகரத்து வைகையாற்றிற்கு தெற்கே குருவிருந்துறையில் சுகலன், சுகலை என்ற தம்பதிகளுக்கு பன்னிரண்டு குழந்தைகள் பிறந்தனர். சரிவர வளர்க்காத்தால் பெற்றோர் இறந்த பின் குலத்தொழிலை விட்டு காட்டில் வேட்டையாடித் திரிந்தனர். ஒரு நாள் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த வியாழ குருவின் மீது கல் எறிந்து அவரது தவத்தைக் கலைத்தனர். கோபம் கொண்ட அவர் அவர்கள் அனைவரும் பன்றிக் குட்டிகளாகப் பிறந்து தாய், தந்தையரை இழந்து தவிக்கும் படி சாபமிட்டார்.

தங்களுடைய சாபம் நீங்குவது எவ்வாறு என குருவிடம் கேட்டனர் அப்பிள்ளைகள். சோமசுந்தரர் ,தாயாக வந்து, முலைப்பால் கொடுத்துக் காத்தருளுவார் எனக்கூறினார் வியாழ பகவான். அதன் படி பன்றி அரிசிக்கு பன்றிக்குட்டிகளாக பிறந்தனர் சகலன் புதல்வர்கள்.

இராஜராஜன் காட்டில்வேட்டையாடி வரும் பொழுது பல மிருகங்கள் பலியாகின. இதனை அறிந்த பன்றியரசன் பாண்டியனுடன் போரிட கிளம்பினான். அங்கேயே தங்கி குட்டிகளை கவனித்துக் கொள்ளுமாறு எவ்வளவு கூறியும் கேளாமல் பன்றியரசி கணவனுடன் போராடச் சென்றாள். வெகு தீவிரமாக போர் நடந்தது. எதற்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட பன்றியரசன், தொடர்ந்து யுத்தம் செய்தான். பன்றியரசனை கொல்ல முடியாமல் போகவே பாண்டியன் இரும்புத்தண்டால் பன்றி அரசனின் சிரசில் அடிக்க இரத்தம் பீறிட இறந்தான்.

பின்னர் பன்றி அரசியும் மரணம் அடைந்தாள். பன்றி அரசனும் அரசியும் இறந்த இடம் மலையாகி நின்றது. அம்மலை பன்றிமலை என்று வழங்கலாயிற்று.

பெற்றோரை இழந்த குட்டிகள் குடிக்கப் பாலின்றி, இருக்க இடமின்றி தவித்தன. அச்சமயம் ஐயன் காட்டிற்கு அம்மையுடன் வந்து, பன்றிகுட்டிகளுக்குஅவற்றின்முன்தாய்பன்றியாகிநின்றார். குட்டிகள் ஓடி வந்து பால் அருந்தின. அக்குட்டிகளுக்கு முகத்தை மட்டும் பன்றி முகமாக வைத்து, மற்ற உருப்புக்களை மனிதன் உடல் போல் செய்து அருளினார்.

அதன் பின் தாமெடுத்த பன்றி உருவத்தை விடுத்து மறைந்தார். அறிவில்லாதபன்றிக் குட்டிகளுக்கு முலைப்பால் ஊட்டி அவர்களை அறிவுள்ள மனிதர்களாக்கினார் ஐயன்.

**பல்லவி**

வியாழனுக்கு துன்பமும் செய்த சுகலன் புதல்வர்களை
பன்றிக் குட்டிகளாய் பிறக்க குருவும் சபித்தார்

**அனுபல்லவி**

கியாகாயுடன் காட்டில் அரசாளும் பன்றியும்
வேட்டையாடும் பாண்டியனை எதிர்த்துப் போரிட்டது

**சரணம்**

தந்தை தாயிழந்து பரிதவித்த குட்டிகளுக்கு
தாயாகி பரிவோடு முலைப் பாலும் தந்தாயே
விந்தையாக அவைகளின் முகம் நீங்கி மற்றவை
மக்கள் உறுப்பினைப் போலே மாற்றி மறைந்தீரே